(7) கவன ஈர்ப்பு.

தமிழாசிரியர்கள் தம் கோரிக்கைகளை வலியுறுத்த மறுப்பு வாரம் நடத்துவது குறித்து

THIRU J. JAMES : Sir, I call the attention of the Hon. Minister for Education and Tourism to a matter of urgent public importance, namely, the grievances and demands of the Tamil Pandits and the protest week being observed by the Secondary Grade Tamil Pandits in this State to press their demands.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தமிழ் ஆசிரியர்களின் கோரிக்கைகளில் முக்கியமானது முதல் நிலை, இரண்டாம் நிலை என்றுள்ள பாகுபாடை நீக்கவேண்டும் என்பது. முதல் நிலைத் தமிழாசிரியரின் சம்பளம் ரூ. 300—500. இரண்டாம் நிலைத் தமிழ் ஆசிரியரின் சம்பளம் ரூ. 210—325. இந்த இரு நிலைகளுக்கும் உரிய தகுதிகளில் முக்கிய வேறுபாடு, முதல் நிலைக்கு பள்ளியிறுதிப் படிப்புத் தேர்ச்சியில் தேர்வு பெற்றிருக்க வேண்டும் என்பது. தமிழ் ஆசிரியர்களுக்கு பொதுக் கல்வி அடிப் படையில் தேர்ச்சி இருப்பது அவசியம் என்பதையும், அந்த அடிப்படையில் இரு நிலைகளை உருவாக்கியுள்ளது பொருத்த மானது என்பதையும், அந்நிலைமை தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்பதையும் தமிழ்நாடு இரண்டாம் ஊதியக் குழு பரிந்துரைத் துள்ளது. இக்கருத்து அரசுக்கும் ஒப்புதலானதே.

முதல்நிலைத் தகுதி பெற்று, போதிய பதவிகள் இல்லாத காரணத்தால் இரண்டாம் நிலையில் பணியாற்றிக் கொண்டிருந்த தமிழ் ஆசிரியர்களுக்கு, முதல் நிலைப் பதவிகளை ஏற்படுத்தித் தர அரசு முன்வந்தது. அந்த அடிப்படையில் 2,260 இரண்டாம் நிலைத் தமிழ் ஆசிரியர் பணியிடங்கள் முதல் நிலை பணி இடங்களாக மாற்றப்பட்டுள்ளன.

இரண்டாம் நிலையில் இன்னும் சுமார் 1,700 ஆசிரியர்கள் பணி யாற்றி வருகிறார்கள் என்றும், முதல் நிலைப் பதவிக்குரிய தகுதி கள் அவர்களுக்கு இல்லையென்றும் அறியப்படுகிறது. முதல் நிலைப் பதவிக்கு தகுதியுடையவர்களை மட்டுமே முதல் நிலைக்கு உயர்த்துவது பொருத்தம் என்ற போதிலும், நீண்ட காலம் இவர்கள் பணியாற்றிய காரணத்தால் இவர்களுக்கு ஊக்க மளிக்கும் பொருட்டு 15 ஆண்டுகள் இரண்டாம் நிலையில் பணி யாற்றியவர்களை, தகுதியின்மையைப் பொருட்படுத்தாமல் முதல்

நிலைக்கு உயர்த்தலாமா என்பது குறித்து அரசு அனுதாபத்துடன் ஆய்வு செய்து வருகிறது. இது குறித்து விரைவில் ஆணைகள் வெளியிடப்படும்.

போதிய தமிழ்த் தேர்ச்சியும், பொதுக் கல்வித் தேர்ச்சியும் உடையவர்களையே தமிழ் ஆசிரியர்களாக இனி நியமிக்க வேண்டுமென்ற அடிப்படையில் இனி நியமிக்கப்படும் ஆசிரியர்கள் அனைவருக்கும் முதல் நிலைப் பதவிக்குரிய தகுதி இருக்கவேண்டுமென்று நிர்ணயித்து, அவர்கள் அனைவருக்கும் முதல் நிலை ஊதியத்தையே வழங்குவது குறித்து அரசு ஆய்வு செய்து வருகிறது.

பயிற்சி பெற்ற தமிழ் ஆசிரியர்கள் போதிய அளவு கிடைக்காத காலக் கட்டத்தில் மதுரை தமிழ்ச் சங்கத்தின் வாயிலாக புலவர் பண்டிதம் பெற்றவர்களையும் தமிழ் ஆசிரியர்களாக நியமிக்கலாம் என்று அரசு பல ஆண்டுகளுக்கு முன்பு அனுமதித்திருந்தது. அது ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க செய்யப்பட்ட இடைக் கால ஏற்பாடு. அதை நிரந்தரமாக்குவது உசிதமல்ல. இனிமேல் பொதுவாக முதல் நிலைப் பதவிக்குரிய தகுதி பெற்றவர்களையே தமிழ் ஆசிரியர்களாகத் தேர்ந்தெடுத்து நியமனம் செய்ய வேண்டுமென்று அரசு கருதுகிறது. இது குறித்து விரைவில் ஆணைகள் வெளியிடப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கால் அட்டன்ஷன் கொண்டு வந்த உறுப்பினர் இல்லை என்றால் வேறு யாராவது பேசலாம் என்று தான் இருக்கிறது. அதற்கு விளக்கம் தர அனுமதி இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : பாயின்ட் ஆப் ஆர்டர். கால் அட்டென்ஷன் மோஷன் கொண்டு வந்தவர்கள் அவையில் இல்லை என்றால் இன்னொரு உறுப்பினர் மோஷனை முன் மொழியலாம். அந்த உரிமை வழங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அதைத் தொடர்ந்து கால் அட்டன்ஷன் கொடுத்த உறுப்பினர்களுக்கு இருக்கின்ற உரிமை அதை "மூவ்" செய்கின்ற உறுப்பினர்களுக்கும் இருக்கிறது என்பதை தலைவர் அவர்கள் உணரவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி இல்லை. அடுத்து பேரவைவிதிகளின் 41-வது விதியின் கீழ் திரு. பி. வெங்கடசாமி அவர்கள் கொண்டுவந்த கவன ஈர்ப்பு பிரேரணையை முன்மொழிய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.